## உக்குவெல பிரதேச சபை
## மாத்தளை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 யூலை 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 18 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உக்குவெல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 10 மயான நிலங்கள் மற்றும் 61 பொதுக் கிணறுகள் என்பன நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 யூன் 25 ஆந் திகதி மத்திய மாகாண தலைமை அமைச்சிடமிருந்து ஈ - நெகும பியச செயற்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 594,061 பெறுமதியான உபகரணங்கள், அவ்வாண்டின் போது பிளிசரு செயற்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 200,000 பெறுமதியான சீவர் இயந்திரம் மற்றும் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 230,992 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 378,984 மற்றும் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,641,745 தொகை என மொத்தம் ரூபா 4,840,729 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 630,293 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) காணி வேறாக்கல் கட்டண வருமானம் மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானம் முறையே ரூபா 9,425 ஆலும் ரூபா 128,650 ஆலும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஆண்டிற்குரித்தாக செலுத்த வேண்டிய ரூபா 78,094 தொகை அட்டுறு செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக ஆண்டின் செலவினம் மற்றும் அட்டுறுச் செலவினம் ரூபா 78,094 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) கடன்பட்டோர் பதிவேடு மற்றும் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 1,123,791 ஆன நிர்மாண கடன்கொடுத்தோர் மீதி நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது.

(ஏ) ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 34 கழிவுப் பொருள் தொட்டிகள், 286 கல்வனைய்ஸ் குழாய்கள் என்பவற்றின் பெறுமதி முறையே ரூபா 9,381 மற்றும் ரூபா 316,602 மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 2 ஆயுர்வேத மருந்தகங்களின் எஞ்சிய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2 வருமான விடயங்கள் மற்றும் 7 செலவின விடயங்களுக்குரிய வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்ட பெறுமதி சீராக்கப்பட்டதன் பின்னர் பேரேட்டுக் கணக்குகளில் ஒப்பிடும் போது அசாதாரண வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அந்த அசாதாரணங்கள் காரணமாக வருமானம் ரூபா 113,942 குறைத்தும் செலவினங்கள் ரூபா 1,218,183 குறைத்தும் காண்பித்தமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானம் மற்றும் செலவினக் கணக்கின் மிகை ரூபா 1,104,241 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 49,896,952 கூட்டுத்தொகையான 08 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 19,751,230 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,278,232 ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 31,137 மீதிகளும் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 2,825,232 ஆக இருந்ததுடன், அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 05 வருட காலத்திற்கு குறைவான காலமாக தீர்வுசெய்யப்படாது காணப்படும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,590,591 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

10 கணக்கு விடயங்களுக்குரிய போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 130,162,793 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமானதாக சுான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

இலங்கை சனநாயக குடியரசின் நிதிப் பிரமாணம் 571 மற்றும் 572 இன் பிரகாரம் வைப்புச் செய்து 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 195,291 பெறுமதியான 14 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,577,241 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,192,387 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,384,854 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்குரிய நிர்மாணச் செலவினம் ரூபா 31,156,163 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அச்செலவினம் ரூபா 84,940,061 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிர்மாணச் செலவினம் 63 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 ஆதனவரி

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 634,083 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 264,878 ஆன மீதிகளும் உள்ளடங்கியிருந்தன.

#### 2.3.2 ஏக்கர் வரி

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவையாக உள்ள ஏக்கர் வரி மீதி ரூபா 31,334 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 31,138 ஆன மீதி 06 வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

#### 2.3.3 நீர்க் கட்டணம்

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவையாக இருந்த நீர்க் கட்டண மீதி ரூபா 1,541,877 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 325,540 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

(ஆ) நீர்ப்பட்டியல் கொடுப்பனவு செய்யப்படாததன் பேரில் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட 294 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 460,702 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அதில் 1 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் துண்டிக்கப்பட்ட 227 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 209,228 ஆன மீதியொன்றும் காணப்பட்டது.

(இ) பிரதேச சபைக்குச் சொந்தமான 4 நீர் முறைமைகளில் கடுவல நீர் முறைமையின் 40 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து நீர்மானிகள் பொருத்தாமல் ரூபா 150 மாதாந்த நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 03 நீர் முறைமைகளில் நீர்மானிகள் செயலற்றிருந்த 25 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து நீர்மானி செயலற்று இருந்ததன் பேரில் ரூபா 150 மாதாந்த நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்த போதிலும், நீர்மானிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

---------------

(அ) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் A மற்றும் C வியாபார கடைத் தொகுதிகளின் 20 கடைகளில் மதிப்பிடப்பட்ட வாடகை அறவிடப்படாததன் காரணமாக 2011 சனவரி 01 முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 621,000 ஆன வருமானமொன்று சபைக்கு கிடைக்காமல் போயிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான B மற்றும் D வியாபார கடைத் தொகுதிகளில் 20 கடைகளுக்கு மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) இறைச்சிக்கடை வருடாந்தம் கேள்வி மூலம் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டிய வேண்டிய போதிலும், கேள்வி கோராமல் சபைக்குச் சொந்தமான B – 01 ஆம் இலக்க இறைச்சிக்கடை ரூபா 750 ஆன மாத வாடகை அடிப்படையில் 2013 நவம்பர் 19 ஆந் திகதி முதல் 2018 நவம்பர் 18 ஆந் திகதி வரை 15 வருட காலத்திற்காக நீண்ட கால வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) குத்தகையாளரால் தமது கடையை உப குத்தகைக்கு வழங்க முடியாத போதிலும், சபைக்குச் சொந்தமான 10 கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது நூலகத்திற்காக அலுவலக உதவியாளர்களின் கடமைகள் தேவைப்படாதிருந்த போதிலும், தென்ன மற்றும் ஓவிலிகந்த ஆகிய 02 நூலகங்களுக்கு 2008 நவம்பர் 03 ஆந் திகதி முதல் அலுவலக உதவியாளர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 370,854 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரமொன்று இல்லாமல் தற்காலிக அடிப்படையில் இரண்டு ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி ரூபா 469,500 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தரரொருவரிடமிருந்தும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 60,748 ஆன கடன்மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் ‘‘இ’’- நெண பியச செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2015 யூன் 25 ஆந் திகதி ரூபா 594,061 பெறுமதியான 10 விடயங்களுக்குரிய 21 பொருட்பதிவேட்டுப் பொருள் அலகுகள் சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், இதன் கீழ் கிடைக்கப்பெற்றிருந்த 02 கணனிகளும் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாத்தளை மாநகர சபையில் நகர உறுப்பினரொருவரான, சபையின் பொது நூலகத்தின் நூலக உதவியாளராக சேவை புரிந்த உத்தியோகத்தரொருவர் நூலகத்தின் கடமைகளுக்காக முறையாக அறிக்கையிடாமலும் கடமைகளை நிறைவேற்றாமலும் இருக்கையில் 2013 முதல் 2015 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காக ரூபா 827,172 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் வதிவிடமாக தங்கியிருந்து வீதவரி மதிப்பீடு மேற்கொண்ட காலமான 2014 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி வரை வதிவிட வாடகை, தொழிலாளர் கூலி, நீர்ப்பட்டியல் மற்றும் மின்சாரப் பட்டியல் என்பவற்றிற்காக ரூபா 1,128,415 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆதனவரி மதிப்பீட்டு அறிக்கை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சபைக்குச் சொந்தமான பழைய கட்டிடம் ரூபா 50,000 மாதாந்த வாடகை அடிப்படையில் 05 ஆண்டு வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக லங்கா சதேச நிறுவனத்துடன் ரூபா 30,000,000 தொகைக்கு 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2013 சனவரி 15 ஆந் திகதிய பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் அப்பழைய கட்டிடத்தை உடைத்து அகற்றியிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 60,000 தொகையான சட்டத்தரணிக் கட்டணம் பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) அச்சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அவ்விடத்தில் கடை அறைகளுடன் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் செயற்பாடு மாவட்ட பொறியியலாளர் மூலம் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கேள்வி வழிகாட்டியிலிருந்து விலகி தனியார் நிரமாண வடிவமைப்பாளருக்கு வழங்கப்பட்டு மதியுரைக் கட்டணங்களாக ரூபா 500,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இக்கட்டிடத்தின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணமொன்றிற்காக சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலகத்திலிருந்து எவ்வித பணமும் மீள்நிரப்பப்படாததன் காரணமாக சபைக்கு ரூபா 147,182 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொது வியாபாரச் சந்தையில் வெட்டுக்கல் பரப்புவதற்காக ரூபா 169,125 தொகைக்கு 5500 வெட்டுக்கல் 2015 யூலை மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக பொதுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்யப்பட்டிருந்த வெட்டுக்கல் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் காணப்படுவதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனமொன்றிடமிருந்து தரச்சான்றிதழொன்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அவ்வெட்டுக்கல் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படாமல் சபை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிங்கொல்ல அலவதுவெல வீதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் நிர்மாண வேலை நேர் ஊழிய அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 10 இன் கீழ் இரண்டாவது தடவை 2,250 சதுர மீற்றர் தார் ஊற்றுவவதற்காக ரூபா 321,750 தொகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூலை 20 ஆந் திகதி வரையிலும் இரண்டாவது தடவை தார் ஊற்றுதல் இடம்பெறாதிருந்தமையால் வீதித்தளத்தின் மேற்பரப்பின் நிலைத்திரு தன்மைக்கு தடையொன்றாக இருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது 02 நிர்மாண வேலைகளை நிர்மாணிப்பதற்காக 02 ஒப்பந்த சங்கங்களுக்கு ரூபா 108,800 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அந்நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 செயற்திட்டத்தை தாமதப்படுத்தல்

பாதீட்டுக் கொள்கை கூற்றின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளாக குறிப்பிடப்பட்டிருந்த பழைய பிரதேச சபை அமைந்துள்ள காணியில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த வர்த்தக தொகுதியின் வாகன நிறுத்துமிடம் மற்றும் கீழ் மாடியினை நிர்மாணித்தல், உக்குவல பொது நூலகத்திற்காக புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல், கழிவுப் பொருள் மீள் சுழற்சி செய்வதற்காக பொருத்தமான காணியொன்றை வழங்கி உக்குவல பிரதேசத்திற்கு மயான வசதிகளை வழங்குதல் போன்ற செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 03 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் சபையின் உழவு இயந்திரம் மற்றும் ஊழியர்களை ஈடுபடுத்தி சேகரித்து அதில் வேறாக்கப்பட்ட 1 ½ மெற்றிக் தொன் கழிவுப் பொருள் அளவு தெமடகொல்ல கழிவுப்பொருள் மீள்சுழற்றி நிலையத்தில் கூட்டுப்பசளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய கழிவுப்பொருள் சபைக்குச் சொந்தமான உக்குவெல மற்றும் அல்கடுவ பிரதேசத்தின் 02 காணிகளில் இட்டு மண்ணால் மூடப்பட்டிருந்தது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களில் பாரியளவு தொகையொன்று சுற்றாடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் இடப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டில் வருமான செலவின விடயங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 18 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட ரூபா 111,566,000 தொகையான வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் 31 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 37 சதவீதம் முதல் 425 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) 24 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,171,000 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 47 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 40 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் கையளிக்கப்பட்டமை காரணமாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) சபைக்குச் சொந்தமான எல்கடுவ நகரத்தில் உள்ள பழைய நூலகம் மற்றும் ஆயுர்வேத மருந்தகம் என்பன அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 509,267 பெறுமதியான பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபை அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 316,602 பெறுமதியான 560 கல்வனைஸ் குழாய்களில் 286 குழாய்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்

(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு